அந்தந்த மாநிலங்களுக்கு என்று இருக்கின்ற நிதியிலிருந்து இதற்கு ஒதுக்க வேண்டும். மது விலக்கு மிகச் சீரிய, கொள்கையாக இருப்பதன் காரணமாக அதற்கு ஊக்கம் தருகிற வகையில், மத்திய அரசு தரவேண்டும் என்றுதான் நாம் திரும்பத் திரும்ப கேட்டுக் கொண்டு இருக்கிறோம். மத்திய அரசு அதை பெற்றுத்தருவதற்கு இல்லை என்று முன்பு முடிவு செய்தது. மீண்டும் அதை நாம் வற்புறுத்திக் கொண்டுதான் வருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மைய அரசு இப்போது 'கோல்ட் பாண்ட்' அதாவது எவ்வளவு 'கோல்ட்' வைத்திருந்தாலும் அதை அரசாங்கத்திலே செலுத்தினால், இந்த 'கோல்ட்' எங்கிருந்து வந்தது என்று கேட்க மாட்டோம் என்று சொல்லி, அதற்கு தகுந்த வட்டியும் கொடுப்போம். அதற்கு குறிப்பிட்ட காலம் கழிந்தால், 'கோல்ட்'-ஐ திருப்பிக் கொடுப்போம் என்று சொல்கிறார்கள். அதாவது 'கோல்ட்-சீஸ்' பண்ணுவதற்காக. அதைப் போல கருப்புப் பணம் கொண்டு வருவதற்கு ஒரு பாண்ட் சிஸ்டம் உருவாக்கி அந்தக் கருப்புப் பணம் எப்படி வந்தது என்று கேட்க மாட்டோம் நாம் வட்டி தருகிறோம் என்கிற திட்டம் ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி மத்திய நிதி அமைச்சர் மன்மோகன்சிங் அவர்களிடத்திலே கேட்க வேண்டிய கேள்வி. நான் முதலிலேயே சொன்னேன். அந்தப் பணத்தை முறைப்படுத்துவது, அதை எப்படி எப்படி வசூலிக்க வேண்டும் என்கின்ற அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை. மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற யோசனையை செய்ய வேண்டுமானாலும் மத்திய அரசுதான் அதற்கான முறையைக் கையாண்டு அதற்கான சட்டத்தைப்போட்டு அதை நடைமுறைப் படுத்த வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்

வினா எண் 628, திரு. எம். பெரியவீரன், இருக்கையில் இல்லை.

வினா எண் 629, திரு. எம். ஆண்டி அம்பலம். இருக்கையில் இல்லை.

வினா எண் 630, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1992 ஏப்ரல் 27]

630—

வணிகவரி வழக்குகளை விசாரிக்க நடுவர் மன்றம்

*8762 திரு. ஆ. சுப்புரத்தினம் :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வணிகவரி சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிக்க சிறப்பு மேல் முறையீட்டு நடுவர் மன்றம் (Special Appellate Tribunal) அமைக்கும் திட்டம் தற்போது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

வணிகவரிகள் சட்டங்களின் கீழ் தொடுக்கப்பட்டுள்ள பல கோடி ரூபாய் வரி தொடர்பான வழக்குகள் பல சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. அவ்வழக்குகளை விரைவாக முடிவு செய்து அதன்மூலம் அரசுக்குக் கிடைக்க வேண்டிய வரி பாக்கித் தொகையை வசூலிக்கும் பொருட்டு உயர் நீதிமன்ற அதிகாரங்களைக் கொண்ட தனியான வரிவழக்கு தனி தீர்ப்பு மன்றம் ஒன்றை அமைக்க இந்த அரசு எண்ணியுள்ளது.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ‘‘ தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும் ’’ என்று ஏசுபிரான் சொன்னதற்கு இணங்க 20 ஆம் நூற்றாண்டினுடைய கண்கண்ட தெய்வமாக விளங்கக் கூடிய எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில், கேட்டவுடன் செய்துகொடுக்கக்கூடிய காரியமாக இந்தத் தீர்ப்பு ஆயத்தை அமைக்கப்படுகிறதாக அறிவித்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்பாதங்களைத் தொட்டு நன்றி தெரிவித்துக் கொள்வதோடு, நீண்ட காலமாக உயர் நீதிமன்றத்தில் தேங்கிக் கிடக்கும் விற்பனை வரி வழக்குகளை விரைந்து பைசல் செய்ய இப்படி தனி தீர்ப்பாயத்தை அமைக்கவேண்டுமென்ற வணிகர்களின் கோரிக்கையை ஏற்று அதற்குரிய அறிவிப்பை வெளியிட்டதுமட்டுமல்லாமல், தனி தீர்ப்பாயத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமித்து, நல்ல கட்டிட வசதியும் செய்து தந்து பணியாளர்களை நியமித்து கூடிய விரைவில் தனி தீர்ப்பாயம் செயல்படத் தொடங்குவதற்கு ஆவன செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமுன்வடிவு இன்றைக்கு அறிமுகப்படுத்தப்பட இருக்கிறது.

[1992 ஏப்ரல் 27

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்ட முன்வடிவு ஒன்று இன்று அறிமுகப் படுத்த இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்த மைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, தனித் தீர்ப்பாயம் தனது பணிகளைத் தொடங்கும்போது, அந்த உயர் நீதிமன்றத்திலிருந்து சற்றொப்ப எவ்வளவு வழக்குகள் இந்த தனித் தீர்ப்பாயத்திற்கு மாற்றப்படும் என்பது பற்றிய விவரம் ஏதேனும் இருக்குமானால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்ட முன்வடிவு இங்கே அறிமுகப்படுத்தி அதை நிறைவேற்றிய பிறகு, அதுமத்திய அரசுக்கு சென்று, அதற்கு அனுமதி பெற்று வரவேண்டும். வந்த வுடன் இன்றைக்கு உயர் நீதிமன்றத்திலே இருக்கின்ற வழக்குகள் எல்லாம் இந்தத் தீர்ப்பாயத்திற்கு மாற்றப்படும். ஏறத்தாழ பல கோடி ரூபாய்க்கு வழக்குகள் அங்கே உயர் நீதிமன்றத்திலே நிலுவையில் உள்ளன.

முற்பகல் 9—45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் வெ. புருஷோத்தமன்.

டாக்டர் வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வணிகவரி சம்பந்தப்பட்ட பல்வேறு வழக்குகள் வெளி மாநிலங்களில் உள்ளன. பல கோடி ரூபாய் நம் தமிழக அரசுக்கு வர வேண்டியிருக்கிறது. அப்படிப் பட்ட வழக்குகளை உடனுக்குடன் தீர்வு செய்வதற்கு தமிழக அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது எடுக்கப் பட்டிருக்கிற நடவடிக்கை உடனேயே இங்கே தீர்ப்பாயம் கொண்டு வருவது என்று எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கை ஆகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 631 திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.